முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்

**OS No.9/2021**

The Oaths Act 1969(Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 04.03.2025 நாளாகிய இன்று முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி திருமதி.S.Suganiya Sri, B.A.B.L.,(Hons),M.L.,PGDAML. அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார்.

| | | | |
|---|---|---|---|
| தேதி | 04.03.2025 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | மூர்த்தி | வயது.. | 56 |
| தந்தை பெயர்.. | மண்ணாங்கட்டி | ஊர் .. | பண்ருட்டி |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை ...**

1. எனக்கு என்ன தொழில் என்றால் சிதம்பரம் நந்தனார் பள்ளியில் 13 வருடங்களாக சமையல் வேலை செய்து வருகிறேன். பழனிசாமியை எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பழனிசாமியை எனக்கு எப்படி தெரியும் என்றால் மங்கலம்பேட்டையில் வேலை செய்த ராமகிருஷ்ணன் மூலம் பழனிசாமி எனக்கு பழக்கம். பழனிசாமி என்ன வழக்கு என் மீது தாக்கல் செய்துள்ளார் என்றால் நான் பணம் வாங்கியது போல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்வு அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார், அதை நான் பெற்றுக்கொண்டேனா என்றால் பெற்றுக்கொண்டேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அறிவிப்பிற்கு நான் என்ன நடவடிக்கை எடுத்தேன் என்றால் வழக்கறிஞரை நான் சந்தித்தேன். வழக்கறிஞர் மூலமாக நான் பழனிசாமிக்கு பதில் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். என்ன பதில் அறிவிப்பு கொடுத்தேன் என்றால் நான் பணம் வாங்கியதுபோல் எழுதி கொண்டார்கள் என அறிவிப்பு கொடுத்தேன்.

2. அதன் பிறகு காவல்நிலையத்தில் ஏதேனும் புகார் கொடுத்தேனா என்றால இல்லை. எனக்கும் பழனிசாமிக்கும் ஏதேனும் விரோதமா என்றால் இல்லை. எதன் அடிப்படையில் பழனிசாமி பணம் கொடுத்தது போல் எழுதிவாங்கி கொண்டார் என சொல்கிறேன் என்றால் கனகு என்பவருக்கு நான் பழனிசாமியிடம் பணம் வாங்கி கொடுக்கும் போது பழனிசாமி என்னுடைய கையெழுத்தை பெற்றுக்கொண்டார். பழனிசாமி எதில் கையெழுத்து வாங்கிக்கொண்டார் என்றால் கட்ட நோட்டில் வாங்கிக் கொண்டார்.

என்னிடம் ஏன் கையெழுத்து வாங்குகீர்கள் என நான் கேட்டேனா என்றால் கேட்கவில்லை. ஏன் அவ்வாறு கேட்கவில்லை என்றால் நான் ஜாமீனுக்காக கையெழுத்து போட்டதால் கேட்கவில்லை. எதன் அடிப்படையில் என் மீது பழனிசாமி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் கட்ட நோட்டில் போட்ட கையெழுத்தை வைத்து தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கட்ட நோட்டில் என்ன எழுதியிருந்தது என்றால் எதுவும் எழுதவில்லை வெள்ளை தாளில் தான் கையெழுத்து போட்டேன். கைரேகை வைத்தேனா என்றால் இல்லை.

3. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் கையெழுத்து மற்றும் கைரேகை உள்ளதா என்றால் உள்ளது ஆனால் என்னுடை கையெழுத்து இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்பது என்னுடை கையெழுத்து இல்லை என்பதை நிரூபணம் செய்ய தடய அறிவியலுக்கு அனுப்பினேனா என்றால் இல்லை. அவ்வாறு தடய நிபுணருக்கு அனுப்ப எனக்கு ஆட்சேபணை உள்ளதா என்றால் இல்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை என்னுடையது என்ற காரணத்தினால் தான் அவ்வாறு நான் தடய நிபுணருக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல.

4. கனகு என்பவருக்கு பழகிசாமியிடம் இருந்து பணம் வாங்கி கொடுத்தேன் என்றால் சரிதான். எவ்வளவு ரூபாய் என்றால் ரூ.70,000/-. கனகு தொகையை பழனிசாமிக்கு செலுத்தினாரா என்றால அதை பற்றி எனக்கு தெரியாது. கனகுவிடம் கடன் பைசல் பற்றி கேட்டேனா என்றால கேட்டேன் அதற்கு பணம் கொடுத்துவிட்டேன் என்று சொன்னார். கனகுவிற்கு இந்த வழக்கை பற்றி தெரியுமா என்றால் தெரியும். நானும், கனகும் பழனிசாமியிம் சென்று பேசினோமா என்றால் பேசினோம். ஆனால் கடன் வாங்கும்போது மட்டும் தான் பேசினோம் அதன் பிறகு பழனிசாமியை நான் பார்க்கவில்லை. உண்மையாகவே புரோநோட்டு forgery யாக தயாரிக்கப்பட்டிருந்தால் அது சம்மந்தமாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்திருப்பேன் அல்லது பழனிசாமியிடம் சென்று கேட்டிருப்பேன் என்றாலும் அவ்வாறு forgery யாக தயாரிக்கப்படாத காரணத்தினால் தான் நான் கேட்டவில்லை என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் உண்மையான ஆவணம் என்றாலும் வாதியை ஏமாற்ற வேண்டும் என்ற காரணத்தினால் தான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**சாட்சி விசாரணை முடிவுற்றது. மறு விசாரணை இல்லை.**

Typed to my dictation in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

Sd/-S.Suganiya Sri,
Principal District Munsif
Chidambaram.